[12th September 1958

சரிவர செய்வதற்கு ஒரு முறையையும் தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுது பஞ்சாயத்து போர்டு தலைவரின் ரிபோர்ட்டை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதன் பிறகு எல்லாம் சரிப்படுத்தப்படும்.

SRI K. ANBAZHAGAN : முனிசிபாலிடிகளில் வீடுகளுக்கு வரியை தீர்மானிப்பதில் ஒரு திட்டவட்டமான கொள்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஆம், கருதுகிறேன்.

SRI A. A. RASHEED : What is the percentage of enhancement made by the Bodinayakanur Municipality ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Two per cent.

Indigenous system of medicine

* 194 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் நாட்டு வைத்திய முறைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான நிலையங்களை ஏற்படுத்துவதற்காக உதவி செய்ய வேண்டுமென்று இந்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் தெரிவித்துக் கொண்ட திட்டத்திற்கு இந்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கப்பட்ட பதில் விவரம் யாவை ?

(ஆ) இத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகச் சென்னை சர்க்காரால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Government of India suggested that research may be conducted in the College and Hospital of Integrated Medicine, Madras, on certain specific diseases like asthma, diabetes, etc., with 50 beds. A grant of Rs. 2,000 per bed per annum has also been sanctioned.

(*b*) This Government have sanctioned the implementation of the scheme with the necessary staff, equipment, etc.

SRI P. G. MANICKAM : இவ்வாறு நாட்டு வைத்திய முறையைப்பற்றி ஆராய அரசாங்கம் விரும்பினால், அந்த ஆராய்ச்சியை தேர்ச்சி பெற்ற தமிழ் நாட்டு வைத்தியர்களைக் கொண்டு நடத்துவார்களா? எந்தெந்த விதமான மருந்துகளை அவர்கள் செய்கிறார்கள், எந்தெந்த வியாதிகளுக்கு எந்தெந்த மருந்துகளை கொடுக்கிறார்கள் என்ற பரிசீலனையை அரசாங்கம் நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரியான பரிசீலனை செய்வதற்காகத்தான் இந்த திட்டம்.

SRI K. ANBAZHAGAN : இந்திய மருத்துவ முறைகளில் சிறப்பான சித்த வைத்தியத்தைக் குறித்து தமிழ் நாட்டில் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று பலரும் விரும்பி அரசாங்கத்தை கேட்டிருக்கிறார்களா ? அவ்வகையான ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காக ஒரு தனி ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தவில்லை. அதற்கு முன்னால் நான் சொன்ன அளவிலே இப்பொழுது ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அது விஸ்தரிக்கப்படும்பொழுது அது பற்றி யோசிக்கப்படும்.

12th September 1958]

Sri K. B. S. MANI : இந்த நாட்டு மருத்துவத்தில் இரண்டு முறை இருக்கிறது. பச்சிலை முறை ஒன்று, கந்தகம் போன்ற உலோக வஸ்துக்களை உபயோகப்படுத்தும் முறை ஒன்று. வட இந்தியர்களைவிட, தென் இந்தியர்கள் இந்த முறையில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருப்பதால், மருத்துவ ஆராய்ச்சி நிலையங்களில் இவர்களை முக்கியஸ்தர்களாக வைத்து, பிரதான தலைவர்களாக வைத்து இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கு சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இம்மாதிரியான ஒரு ஆராய்ச்சி இப்பொழுது செங்கோட்டை தாலுகா பக்கத்தில் ஒரு கிராமத்தில் தேவஸ்தான பண உதவியோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலே நாம் கொஞ்சம் ஊன்றி ஆராய்ச்சி செய்த பிற்பாடு, எந்த வகையிலே உள்நாட்டு வைத்தியத்தை இன்னும் அதிகமாக விஸ்தரிப்பது என்பது பற்றி யோசிக்கலாம்.

Sri N. MARUDACHALAM : அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட நாட்டு வைத்திய ஆஸ்பத்திரிகள் எத்தனை இருக்கின்றன ? அவைகள் எந்தெந்த இடத்தில் இருக்கின்றன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அதற்கு முன் அறிவிப்பு கொடுத்தால், பதில் சொல்லுவேன்.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : இம்மாதிரி ஆராய்ச்சிக்கூடங்கள் ஏற்படுத்த சர்க்கார் முடிவு செய்து முன் வந்தால், சித்த வைத்தியத்திலே அதிகமாக பிரசித்தி பெற்ற பழனியில் இந்த ஆராய்ச்சி கூடத்தை நிறுவ முன்வருவார்களா ?

Mr. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் ஊரில் இந்த ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று கேட்டால், மந்திரி அவர்கள் எப்படி பதில் சொல்ல முடியும் ?

Industries at Neyveli

*195 *Q.*—**Sri V. K. KRISHNAMURTHI** (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the main and allied industries to be started at Neyveli;

(*b*) whether any electrical wares manufacturing plant is also to be installed at Neyveli; and

(*c*) if so, details as to the cost, its productive capacity and the date of commencement of the work?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The integrated lignite per year, the setting up of a large thermal power station of lignite per year, the setting up of a large thermal power station of 250 M.W. using lignite as fuel for steam generation, a fertilizer unit for the manufacture of nitrogenous fertiliser with a nitrogen content of 70,000 tons per annum in the shape of urea only, and a briquetting plant for the manufacture of about 380,000 tons of carbonised lignite briquettes. A scheme for washing the china clay available close to the lignite is also being prepared.

These are the main industries at present and are the responsibility of the Government Company, namely, the Neyveli Lignite Corporation (Private), Limited.

(*b*) Seshasayee Industries, Limited, Tiruchirappalli, have been granted a licence under the Industries (Development and Regulation) Act, 1951, to set up a factory for the manufacture of porcelain H.T. and L.T. insulators.